Rgistered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (27 - 01 - 1991) ஞாயிற்றுக்கிழமை ஓசை: 343

## 1992ஆம் ஆண்டுக்கான பாடத்திட்டம் வரவில்லை

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத்தராதரப் பரீட்சை (உயர்தரம்) ஆண்டு 1992க்கான பாடத்திட்டம் இதுவரை பரீட்சைப் பகுதியினால் யாழ் குடாநாட்டு பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. குறைந்தது பரீட்சைக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பாவது ஆசிரியர்களும், மாணவர்களும் ... தெரி... (4 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று நாள் விமானக் குண்டு வீச்சால்
# இடிந்த கட்டடங்களின் குவியல்களாக வல்வை.

## 650 வீடுகள், 6 கோயில் 1 தேவாலயம் அழிவு

(ஸ்தலத்திலிருந்து நமது நிருபர்)

வல்வெட்டித்துறை நகரசபைப் பகுதிக்குள் கடந்த இருபதாம் திகதி தொடங்கி தொடர்ச்சியாக மூன்று நாட்கள் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான விமானத் தாக்குதலினால் அறுநூற்றி ஐம்பதுக்கு மேற்பட்ட வீடுகள் தகர்ந்தன. ஆறு கோயில்கள், ஒரு தேவாலயம் என்பனவும் புனரமைக்க முடியாத அளவுக்கு சேதமடைந்தன. குறிப்பாக ஆதி கோயிலடிப் பகுதியில மாடிக் கட்டடங்கள் உட்பட அனைத்து வீடுகளுமே தரைமட்டமாகியுள்ளன.

சிறிலங்கா விமானப் படையினர் மேற்கொண்ட இந்தத் தாக்குதல் பற்றி மேலும் தெரியவருவதாவது;

கடந்த 20ஆம் திகதி பகல் 12-30 மணியளவில் வல்வெட்டித்துறை பகுதியை வட்டமிட்ட ஹெலிகொப்ரர்கள் ரேணியோ செய்யப்பட்ட துண்டுப்பிரசுரங்களை வீசின. 48 மணிநேரத்துக்குள் இந்தப் பகுதி மக்கள் தமது உடைமைகளை எடுத்துக்கொண்டு வெளியேறிவிட வேண்டும் என அவை மக்களை எச்சரித்தன ஆனால் பிற்பகல் 3-30 மணிக்கே விமானத் தாக்குதல் முடுக்கிவிடப்பட்டது. இடைவெளியில்லாமல் மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலால் மக்கள் இப்பகுதியிலிருந்து வெளியேறமுடியாமல் பதுங்குகுழிகளுக்குள்ளேயே இருந்திருந்தார்கள். பதுங்குகுழிகள் அனைத்துமே மக்களால் நிறைந்திருந்தன.

முதல்நாள் இரவு தாக்குதல் சற்று ஓய்ந்ததும் மக்கள் அனைவரும் வெளியேறிவிட்டனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## முத்துமாரி அம்மன் கோயிலுக்கு 3 கோடி ரூபா நஷ்டம

(வல்வெட்டித்துறை)

ஜனவரி 20 தொடக்கம் நான்கு நாட்கள் தொடர்ச்சியாக சிறிலங்கா விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்களின் கடும் தாக்குதல்களினால் வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் கோவிலும் முற்றாகவே சேதமடைந்தது.

நான்கு நாட்களிலும் சுமார் 20 குண்டுகள்வரை கோயிலுக்குள்ளும், கோயிலின் சுற்றாடலிலும் விழுந்து வெடித்ததில் தேர் கொட்டகைகள், மூன்று சித்திரத்தேர்கள், வாகனங்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

## மணலாற்றிலும் குண்டுவீச்சு

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சிறிலங்காவிமானப் படையைச் சேர்ந்த குண்டுவீச்சு விமானங்கள் மேற்கொண்ட விமானத் ...

மாவட்டத்தில் உள்ள ... செம்மலை போன்ற பகுதிகளை அண்டியுள்ள இடங்களில நான்கு குண்டுவீச்சு விமானங்கள் விமானத் ...

## மகேந்திரராசா பார்வையிட்டார்

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசா அவர்கள் நேற்று வல்வெட்டித்துறைப்பகுதிக்குச் சென்றார். அங்கு ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்ட அவர் ...

## வீரவணக்கம்

### மேஜர் கௌரி

நேற்று காலை பத்து மணிக்கு மன்னார் மாவட்டத்தில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் மேஜர் கௌரி (சுகுஜீவன், பாப்பபெருமாள் வெட்டை, வட்டக்கண்டல்) வீரமரணம் அடைந்தார்.

### பற்றிக்

ஆனையிறவில் கடந்த 23ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்திருந்த வீரவேங்கை பற்றிக் (கணேசலிங்கம் இன்னராசு, அறாவட்டாரம், சாம்பல்தீவு) நேற்று வீரமரணமடைந்தார்.

### கிருஷ்ணானந்தன்

மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில வீரவேங்கை கிருஷ்ணானந்தன் (... நாதன பரமநாதன் செம்மு புத்துறை) வீரமரணமடைந்தார்.

இவர்கள் மூவருக்கும் விடுதலைப் புலிகள் ...

## வளைகுடா நிலைமை

★ ஈராக் கைப்பற்றியுள்ள குவைத் பிராந்தியத்திலுள்ள எண்ணெய்க் கிணறுகளின் தளையிலக்க அடைப்புகளைத் திறந்துவிடுவதன்மூலம் கடற்பரப்பில் தாக்குதலை ஈராக முறியடிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியுள்ளது.

★ சுற்றாடலில் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் பற்றி ஐ.நா சபையிடம் ஈராக் முறையிட்டுள்ளது.

★ கடந்த பத்து நாட்களிலும் பல்தேசப் படைகள் 17 500 தடவை விமான மார்க்கமான தாக்குதல் ஈராக் குவைத் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

★ ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைகளைத் தடுப்பதற்காக சவூதி அரேபியாவில் வைக்கப்பட்ட 'பற்றியாட்' ஏவுகணை ஒன்று சவூதி அரேபியாவிலுள்ள பல்தேசப் படைகளின் பிரதான முகமொன்றில் விழுந்து வெடித்துள்ளது. சேதவிபரங்கள் அறிவிக்கப்படவில்லை.

★ அமெரிக்கப் படையினரை ஏற்றிச் சென்ற இராணுவ கனரக வாகனம் ஒன்று சவூதி அரேபியாவின் பிரதான நெடுஞ்சாலையில் தீப்பிடித்து வெடித்தது இதில் பயணம் செய்தவர்கள் பலர் கொல்லப்பட்டனர் இச்சம்பவத்தால் அமெரிக்கப் படைகளின் நடமாட்டம் இரண்டு மணிநேரம் தடைப்பட்டது. இச்சம்பவத்திற்கான காரணம் பற்றி ஆராய புலன் விசாரணை தொடக்கப்பட்டுள்ளது.

★ இஸ்ரேலின் டெல்அவிவ், கைபா. நகரங்கள் மீது ஐந்தாவது தடவையாக ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தியுள்ளது இவ் ஏவுகணைகளைத் தடுப்பதில் அமெரிக்காவின் 'பற்றியட்' ஏவுகணைகள் முழுமையான வெற்றியுடன் செயற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

★ வளைகுடாவில் தோன்றியுள்ள யுத்தத்தினால் இப்பிராந்தியத்தின் சுற்றாடல் சூழல் பல ஆண்டுகளுக்கு மாசடைந்திருக்கும் என்று சுற்றாடல்துறை நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்

★ மொரிசியஸ் வளைகுடாப் பிரச்சினையில் சமாதானத்தை ஏற்படுத்த இந்திய எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளது. ஈராக்கின் இராணுவ நிலைகள் மீதும், பொதுமக்கள் குடியிருப்புக்கள் மீதும் தாக்குதல் நடத்தி அவற்றை அழித்தொழிக்கும் சந்தர்ப்பத்தை ஐக்கிய நாடுகள் தீர்மானம் அமெரிக்காவிற்கு வழங்கியுள்ளதாக மொரிசியஸ் கவலை தெரிவித்துள்ளது.

★ பல்தேசப் படைகளின் இரண்டு விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாக ஈராக் நேற்றுக் கூறியது.

★ சவூதியில் ஏழு தடவைகள் குண்டுவெடிப்புச் சத்தங்கள் கேட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது

★ ஈராக் ஏவிய ஸ்கட் ஏவுகணைகள் சவூதியின் தலைநகர் றியாட்டில் விழுந்து வெடித்துள்ளன.

★ அவுஸ்திரேலியாவில் பயங்கரவாதக் காரணங்களை முன்னிட்டு ஈராக்கிய தூதுவர் வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளார். அதனுடன் வளைகுடா யுத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் சகல ஆர்ப்பாட்டங்களுக்கும் தடைவிதிக்கப்பட்டுள்ளன.

★ பாரிஸில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவமொன்றில் மூன்று காவலர்கள் உயிரிழந்துள்ளனர். வளைகுடா யுத்தத்திற்கும் இச்சம்பவத்திற்கும் தொடர்பு உண்டு எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

★ ஈரானின் ஒரு பகுதியும் வளைகுடாவின் வடபகுதியுமான மண்டலங்களை மூடப்படுவதாக ஈரான் கூறியுள்ளது ...

## 103 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

வீர ஜனனம்
09. 02. 1968



வீரமரணம்
19. 10. 1990

### கப்டன் குட்டி
அம்மையப்பபிள்ளை
கிருஷ்ணராஜா

மண்ணில்:
26 - 09 - 1943



விண்ணில்:
01 - 11 - 1990

திருமதி
மங்கையர்க்கரசி அம்மையப்பபிள்ளை

பலாலியில் இருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த கப்டன் குட்டியின் 103 ஆம் நினைவு நாளும் அவரது தாயாரின் 90 ஆம் நினைவு நாளும் 29 01 1991 இல் அனுஷ்டிக்கப்படவுள்ளது அந்தியேட்டிக் கிரிகைகளும், சபிண்டிக்கிரியைகளும் கிருஷ்ணராஜா வீதி(வி.மு.தெரு) பருத்தித்துறையிலுள்ள இல்லத்தில் இடம்பெறவுள்ளன. உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

வ. வேலுப்பிள்ளை
(B- 1824)

## 31 ஆம் நாள் வீர அஞ்சலி



வீர ஜனனம்

---

## வரி விளம்பரம்

### தவறி விட்டது

சிறுபாகரன் என்பவருடைய காசோலை ஒன்று மானிப்பாய்க்கு சுன்னாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது இதைக் கண்டெடுத்தவர் மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பளை மருத்துவமனையில் ஒப்படைக்கவும்.

(B/1938)

### தவறி விட்டது

க. சந்தனலிங்கம் என்பவருடைய காசோலை இல. 904 91. 904088 என்பன ஆனைக்கோட்டைச் சந்தைக்கும் ஓட்டுமடத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(B-1199)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்
07 - 05 - 1952



வீர மரணம்
6 - 01 - 1988

### கனகலிங்கம் புஷ்பநாதன் (நாதன்)
திதி: 27 01-1991

அன்பின் மகனே, அண்ணா
அண்ணா நீ எங்கு சென்றாயோ
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
மூன்று வருடம் ஆனாலும்
உமது நினைவு எம்மனதை
விட்டு ஒரு நிமிஷமும் அகலவில்லை.
உமது ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இணுவில்.
R/1006)


அம்மா சகோதரர்.
சகோதரி மைத்துனர் மருமகன்

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்



---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## துக்கப்பாடற்பூசை அழைப்பும்



மண்ணகம்
25 - 05 - 1938

விண்ணகம்
29 - 12 - 1990

### அமரர் ஜேக்கப் மனுவல் கிறகரி
(செல்வராசா மாஸ்டர்)

கிறகரி எனப் பெயர் சூடி வாஞ்சையுடன்
புவிதனில் எம்முன் நீர் இருந்தீர்!
புவிமலர் மண்ணில் வாடி
கிறகரி நீர் விண்ணில் விரிந்தாலும்,
வல்லபரன் காத்தில் மலர்ந்து
இணைய இறைஞ்சுகிறோம்!

இவரின் ஆத்ம சாந்திக்காக 28-01-1991 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். பரிசுத்த சாமேல் மாதா தேவாலயத்திலும் நாரந்தனை-புனித சின்னப்பர் இராயப்பர் ஆலயத்திலும் துக்கப்பாடற் பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இப் பூசையில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைஞ்சுமாறு விநயமாக கேட்டுக் கொள்கிறோம்.

பூசை முடிந்ததும் இல்ல உபசரணையில் கலந்து கொள்ளவும்.

பிரிவால் துயருறும்
மனைவி மக்கள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள் சகோதரர்கள்
உற்றார் உறவினர் நண்பர்கள்

85/6. மவுண்காமேல் வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.
(B 1930)

கண்ணாவில் லேன்.
கரம்பொன் கிழக்கு.
ஊர்காவற்றுறை.

## நினைவு கூருகின்றோம்!

### ஜனவரி 27

1987 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
மோகன் (சோ. விமலதாஸ்-ஒலுமடு)

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மரணத்துள் வீழ்ந்தகெல்லாம்

மண்ணில்: 26 - 09 - 1943



விண்ணில்: 01 - 11 - 1990

திருமதி
மங்கையர்க்கரசி அம்மையப்பபிள்ளை

பலாலியில் இருக்கும் சிறிலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணமடைந்த கப்டன் குட்டியின் 103 ஆம நினைவு நாளும் அவரது தாயாரின் 90 ஆம் நினைவு நாளும் 29 01 1991 இல் அனுஷ்டிக்கப்படவுள்ளது அந்தியேட்டிக் கிரிகைகளும், சபிண்டிக்கிரியை ஞம் கிருஷ்ணர ஜா வீதி(வி மு.தெரு) பருத்தித்துறையிலுள்ள இல்லத்தில் இடம்பெறவுள்ளன உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு. — வ வேலுப்பிள்ளை (B- 1824)

07 - 05 - 1952



6 - 01 - 988

கனகலிங்கம் புஷ்பநாதன் (நாதன்)
திதி: 27 01-1991

அன்பின் மகனே, அண்ணா
அண்ணா நீ எங்கு சென்றாயோ
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
மூன்று வருடம் ஆனாலும்
உமது நினைவு எம்மனதை
விட்டு ஒரு நிமிஷமும் அகலவில்லை.
உமது ஆத்மா சாந்தி அடைய
இறைவனை பிரார்த்திக்கிறோம்.

இணுவில். — அம்மா சகோதரர். சகோதரி மைத்துனர் மருமகன்
R/1006)

புவிதனில் எம்முடன் நீர் இருந்தீர்!
புவிமலர் மண்ணில் வாடி
கிறாரி நீர் விண்ணில் விரிந்தாலும்,
வல்லபரன் காத்தில் மலர்ந்து
இணைய இறைஞ்சுகிறோம்!


இவரின் ஆத்ம சாந்திக்காக 28-01-1991 திங்கட்கிழமை காலை 6-15 மணிக்கு யாழ். பரிசுத்த கார்மேல் மாதா தேவாலயத்திலும் நாரந்தனை-புனித சின்னப்பர் இராயப்பர் ஆலயத்திலும் துக்கப்பாடற் பூசை ஒப்புக் கொடுக்கப்படும். இப் பூசையில் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைஞ்சுமாறு விநயமாக கேட்டுக் கொள்கிறோம்.

பூசை முடிந்ததும் இல்ல உபசரணையில் கலந்து கொள்ளவும்.

பிரிவால் துயருறும்
மனைவி மக்கள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள் சகோதரர்கள்
உற்றார் உறவினர் நண்பர்கள்

85/6, மவுண்காமேல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம். (B 1930) — சுண்ணாவில் வேலி. கரம்பொன் கிழக்கு. ஊர்காவற்றுறை.

## 31 ஆம் நாள் வீர அஞ்சலி



வீர ஜனனம்
1974 - 08 - 05

வீரமரணம்
1991 - 12 - 28

வீரவேங்கை பாலா
இராசையா தவநேசன்

இவன் சாதாரணம் ஆனவன் அல்ல
இங்கே சரித்திரம் ஆனவன்.
மந்தை இனம்போல் மரணித்தவன் அல்ல
மாவீரனாக மனங்களில வாழ்பவன்.
சொந்தம் வாழ சொத்து தேடியவன் அல்ல
சுதந்திரம் காண சுகந்தம் இழந்தவன்.
வெற்று அரசியல் பேசியவன் அல்ல
வீரனாக வாழ்ந்து மடிந்தவன்.
விதியினிலே விழலுக்காக திரிந்தவன் அல்ல
விதியினை மாற்ற போராடியவன்;

அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி, — குடும்பத்தார்;
(R/1051)

## 6 ஆம் மாத நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு: 06 - 06 - 1963



இறப்பு: 01 - 08 - 1990

மேஜர்
குட்டி
(சீவரத்தினம் - சிறீதரன், தையிட்டி)

பொன்னான தமிழீழம் பொலிவுற்றுத் திகழ்ந்திடவே
மன்னாரில் நீ செய்த மாண்புமிகு சாதனைகள்
நின்நாமம் நிலைத்திருக்க நின்றிடுமே நிலைக்களனாய்
உனையாவி தனையே தமிழுக்காய் ஈந்திட்டாய்,

27 - 01 - 1991 ஞாயிறு (இன்று) எமது இல்லத்தில் நடைபெறும அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

உடுவில் கிழக்கு, சுன்னாகம. — பெற்றோர், சகோதரர்.
(B- 1934)

## நினைவு கூருகின்றோம்!

## ஜனவரி 27

1987 ஆம் ஆண்டு வீரமரணமடைந்த
மோகன் (சோ. விமலதாஸ் - ஓமந்தை)

அவர்களை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மாணத்துள் வீழ்ந்ததெல்லாம்
மானத்தைக் காப்பதற்கே!
மக்களைக் காப்பதற்கே
மனம் நிறைந்த ஆசையுடன்
வேங்கைகள் படையில் நின்று
எங்கள் மண் மீட்கும் போரில்
எங்களைத் தந்து விட்டோம்

காலமெல்லாம் கண்ணீரில்
கரையலாமோ...?

அஞ்சலிக்கர்க எழுப்பும்
அழுகைக் குரல் வேண்டாம் - எம்
நெஞ்சத்தின் நினைவுகளை
எண்ணத்தில் தாங்கி
வெஞ்சினம் கொண்டு
போர்க்களம புகுவீர்!
மிஞ்சிடும் வெற்றி சேர்ப்பீர்!
வேண்டாம் இனி அச்சம்

ஏந்திய ஆயுதத்தில் பலம் இருக்கும்!
எழுதும் புலவனுக்கு புதுப்பொருள்
கிடைக்கும்!
சிந்திய இரத்தத்தில் மண் சிவக்கும்!
சிவந்த மண்ணில் எம் கொடி ஏறும்!

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-1891)

★ சிந்தனைக்கு ★

அமெரிக்காவைக் கண்டுபிடித்தது அற்புதமான சாதனை. ஆனால் அதைக் கண்டுபிடிக்காமல் இருந்திருந்தால் அதைவிட அற்புதமான சாதனையாக இருந்திருக்கும்.

— மார்க் ட்வெயின்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி யாழ்ப்பாணம் 27-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த பெ எண் 05


## கானல் நீரைத் தேடும் சமாதான முயற்சிகள்

வளைகுடாவில் பன்னாட்டுப் படைகளுக்கும் ஈராக்கிற்கும் இடையில் போர் ஆரம்பித்து நேற்றுடன் பத்து நாட்கள் முடிவுற்றுவிட்டன. போரை ஆரம்பிக்கும் போது அமெரிக்க தலைமையிலான பன்னாட்டுப் படைகள் எதிர்பார்த்தது போன்று போர் இலகுவானதாகவோ அன்றி வெற்றி அண்மையில் உள்ளதாகவோ இல்லை என்பது மட்டும் உண்மை. இதனை அமெரிக்க ஜனாதிபதியே ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆனால் அமெரிக்க பன்னாட்டுப் படைகளின் விமானத் தாக்குதல்கள் ஈராக்கின் குழந்தைகளுக்கான பால்மா தயாரிப்பு தொழிற்சாலை தொடக்கம் அணு உற்பத்தி நிலையம் வரை குண்டு வீசி அழிந்துவிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. கடந்த பத்துத் தினங்களில் மட்டும் 17 500 தடவைகள் குண்டுகள் பன்னாட்டுப் படையினரால் ஈராக் - குவைத் மீது வீசப்பட்டுள்ளன. இதிலிருந்து விமானத் தாக்குதல்களின் அகோரம் தெரியவரும்.

அதேவேளை, போர் இன்னும் பல மாதங்கள் நீடிக்கலாம் என அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்சும், பிரிட்டன் பிரதமர் ஜோன்மேஜரும் அறிவித்துள்ளார்கள். அத்தோடு மேலதிக துருப்புக்கள் வளைகுடாவிற்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒருபுறம் இவ்வாறாக யுத்தம் தீவிரமடைந்துவரும் வேளையில் மறுபுறத்தில் யுத்த நிறுத்தம் கொண்டு வரப்பட வேண்டும் என உலகின் பல பாகங்களிலும் இருந்து கோரிக்கைகள் வெளிவந்துகொண்டிருக்கின்றன. மக்கள் பல பகுதியில் யுத்தத்தை நிறுத்தும்படி இலட்சக் கணக்கில் திரண்டு குரல் எழுப்பியவண்ணமுள்ளார்கள்.

அதேவேளை யுத்தநிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என பல உலக நாடுகளும், நிறுவனங்களும் முனைப்பான செயலிலும் ஈடுபட்டுள்ளன. யூகோஸ்லாவியாவின் தலைமையில் உள்ள அணிசேரா நாடுகள் விசேட அணிசேரா நாடுகளின் அமைச்சரவை மாநாடு கூட்டப்பட வேண்டும் எனவும் அதன்மூலம் வளைகுடாவில் யுத்த நிறுத்தம் / சமாதானம் தோன்ற வழிவகை செய்யப்பட வேண்டும் என முயற்சிக்கின்றன.

மேலும் பாகிஸ்தான் பிரதம மந்திரி இஸ்லாமியர் என்ற ரீதியில் வளைகுடாவில் உடன் யுத்த நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டும் என சில அரபு நாடுகளுக்கும் இஸ்லாமிய நாடுகளுக்கும் விஜயத்தை மேற்கொண்டுள்ளார். இதற்கு ஈரானும் பெரிய வரவேற்பு வழங்கியுள்ளது.

அடுத்ததாக வட ஆபிரிக்க நாடுகளான லிபியா, அல்ஜீரியா, மொரோக்கோ ஆகிய நாடுகள் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபையில் யுத்த நிறுத்தம் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என கோரிக்கை விட்டிருந்தன. இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் கூட்டப்பட்ட பாதுகாப்புச்சபை யுத்தநிறுத்த கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

இவ்வாறாக யுத்த நிறுத்தம் / சமாதானம் பற்றி [illegible]

## தேயிலை ஏலவிற்பனையில் மந்தம்; களஞ்சியப்படுத்த வசதியில்லை

(கொழும்பு)

பாரசீக வளைகுடா யுத்தத்தினால் இலங்கைத் தேயிலை ஏற்றுமதி வியாபாரத்திலும் இழப்பு ஏற்பட்டுள்ளது. கொழும்பில் கடந்த வாரம் இடம்பெற்ற தேயிலை ஏலத்தில் 67 லட்சம் கிலோ கிராம் தேயிலை ஏலத்தில் விடப்பட்டது. ஆனால் ஏலத்தில் தேயிலைக்கு அதிகம் கிராக்கி இருக்கவில்லையாம். இலங்கைத் தேயிலையில் 55 வீதத்தை மத்திய கிழக்கு நாடுகள் கொள்வனவு செய்கின்றன. யுத்தம் காரணமாக அந்நாடுகள் தேயிலை ஏலத்தில் அக்கறை காட்டவில்லை.

வங்கிகள் கடன் பத்திரங்களை வழங்க மறுத்ததும், சரக்கு கப்பல்கள் வளைகுடாவிற்கான பொதிகளை ஏற்க மறுத்ததும் தேயிலை வியாபாரம் பெரும் நெருக்கடியை எதிர்பார்க்க வேண்டியுள்ளது. இதே வேளை சில வளைகுடா நாடுகளுக்கான கப்பல் சேவைகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன. ஏற்றுமதி செய்ய முடியாமல் தேங்கிக் கிடக்கும் தேயிலையைக் களஞ்சியப்படுத்த போதிய வசதியின்மை காரணமாக உள்ளூர் ஏல விலையில் வீழ்ச்சி ஏற்படலாம் என்று வியாபார வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த ஆண்டு முதல் மூன்று மாத காலப் பகுதியில் எகிப்து 263 லட்சம் கிலோ கிராம், ஈரான் 204 லட்சம் கிலோ கிராம், சிரியா 119 லட்சம் கிலோ கிராம், சவூதி அரேபியா 104 இலட்சம் கிலோ கிராம் தேயிலையை இலங்கையிலிருந்து கொள்வனவு செய்தன. இந்த நடுவில் இலங்கைத் தேயிலை ஏலத்தில் கவனம் செலுத்தவில்லையாம். 188 மில்லியன் கிலோ கிராம் தேயிலையைக் கொள்வனவு செய்த ஈராக் கடந்த ஆண்டில் கொள்வனவு ஏலத்திலிருந்து விலகிக் கொண்டது.

## சிறுதானிய உற்பத்தி பற்றி முகாமையாளருக்கு பயிற்சி

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திருநெல்வேலியில் கடந்த 21 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் காலபோக அறுவடைக்குப் பின் சிறுதானியங்கள் பயிர்கள் உற்பத்தி செய்வது சம்பந்தமான யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்களுக்கும் பயிற்சி நடைபெற்றன.

விவசாயத் தொழில்நுட்பப் பாளர் திரு க. குணரத்தினம் இப்பயிற்சி வகுப்புகளை திறம்பட நடத்தினார். இதற்கு திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையம் முன்வந்து எல்லா விதமான உதவிகளையும் வழங்கி இப்பயிற்சியை முன்னின்று சிறப்பித்தது. (24)

## பணம் வந்தால் ஓய்வூதியம்

(வடம்பாணம்)

பாதுகாப்புத்துறைக்கு இன்று வந்து சேரவுள்ள வங்கிநிதி கப்பலில் இலங்கை வங்கிக்காக நிதி எடுத்துவரப்படவுள்ளது. இந்நிதி வந்துசேர்ந்ததும் செவ்வாய்க்கிழமையளவில் ஓய்வூதியர்களுக்கான ஓய்வூதியம் வழங்கப்படும் என ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கைவங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்துள்ளார். (மு)

## கலந்துரையாட அதிபர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் திணைக்களத்தை மேற்பார்வையாளராக பயிற்சி பெறும் மாணவர்களை சில முக்கிய விடயங்கள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்கு தேசிய தொழில் பயிற்சி அதிகார சபை இடமிட்டிருப்பதால் அனைத்து மாணவர்களையும் இம்மாதம் 31 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு யாழ் தொழில்நுட்பக்கல்லூரிக்கு சமூகம் தரும்படி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் வேண்டிக் கொண்டுள்ளார்.

அண்மையில் கொழும்பிலிருந்து வந்திருக்கும் இவ்வமைச்சின் நிர்மாணத்துறையில் மேற்பார்வையாளராக பயிற்சி பெற்றும் வெளிவராப் [illegible]

## தடுப்பூசி மருந்து தட்டுப்பாடு

(நல்லூர்)

யாழ் போதனா வைத்திய சாலையில் போலியோ தடுப்பூசி மருந்து தட்டுப்பாடாக உள்ளதாகக் கூறப்படுகிறது. 3, 4, 7, 8 மாதக் குழந்தைகளுக்கான போலியோ தடுப்பூசி மருந்துகளே இங்கு தட்டுப்பாடாக உள்ளது.

இதே வேளை பிறந்த குழந்தைகளுக்கான (BCG) ஊசி மருந்து கையிருப்பில் இருப்பதனால் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் இந்த ஊசி போடப்படுகிறது. (85)

அத்தியாவசியப் பொருள்களின் விலை

## கட்டுப்பாட்டைத் தொடர்ந்து உரப்பைகள் வரவு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசியப் பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை [illegible] அறிவிக்கப்பட்டதும் [illegible] வியாபாரிகள் தம்மிடமுள்ள உர வகைகளை எடுத்து வந்தனர் யூரிய போன்ற உரவகைகளை சிறிய அளவில் எடுத்து வருவதை [illegible] யினர் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால், உரவகைகளுக்கு கூடிய தட்டுப்பாடு இல்லை. ஈராக்கில் நிலவுவதாலும் ஈராக்கிய உரம் எடுத்து வருவதால் இல்லை நாட்கள் அதிகரித்துள்ளது.

## பெற்றுக்கொள்ளவும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பெரியார் வீதியில் நேற்று முன்தினம் திறப்புக் கோர்வை ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (பு)

## வேலைவாய்ப்பு திட்டங்கள் உருவாக்க கலந்துரையாடல்

கருத்துக்களை சம்பந்தமான கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையில் மேற்கு நாட்டு அரசியல் விமர்சகர்கள் தங்கள் கருத்துக்களை வெளியிடுகையில் நடுவுநிலைமையைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். [illegible]மான நிலையை எதிர்

**விமானக் குண்டு**

[illegible] நான்கு குண்டுகளை வீசின. இதனால் குரும்பசிட்டிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து அப்பகுதியில் தங்கியிருந்த ரத்தினம் இளையதம்பி (வயது 70) என்பவர் படுகாயமடைந்த சில நிமிடங்களில் அவ்விடத்திற்கு வந்த அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவு முதலுதவிச் சிகிச்சையை மேற்கொண்ட போதிலும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. திருமதி நாகநாதர் என்பவருக்கு கையில் காயம் ஏற்பட்டுள்ளது.

இத்தாக்குதலின்போது நாகநாதர், கார்த்திகேசு, சுந்தரமூர்த்தி, சிதம்பரப்பிள்ளை ஆகியோரது வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளதுடன் அருகிலிருந்த [illegible] உற்பத்தி நிலையமும் இரு கடைகளும் சேதமடைந்துள்ளன. (ச)

**1992 ஆம்**

ஆண்டு பாடப்பரப்பை அறிவிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இது பற்றிக் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

[illegible] எடுக்கும் மாணவர்கள் பாடத்திட்டத்தில் இருந்து [illegible] பாடநூல்களின் பெயர்களைத் தெரி[illegible] வாரம்,

# வளைகுடா போரால் அழியும்

(டில்லி)

- வெங்கட்ராமன்

இந்தியாவின் 42 ஆவது தேசிய தினம் நேற்று இந்தியா முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் அதி உயர் விருதான பாரத ரத்னா விருது முன்னாள் பிரதமரான மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. இந்திய குடியரசு தினத்தை ஒட்டி நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி வெங்கட்ராமன் ஆற்றிய உரையில் வளைகுடா யுத்தம் முடிவடைந்த தன்மையின் தன்மைகளை வளைகுடாப் பேரழிவு அழிந்துவிடும் ஆபத்துப் பற்றி எச்சரித்தார்.

இந்தியா போன்ற பல கட்சிகள் உள்ள நாட்டில் கூட்டணி அரசுகள், சிறுபான்மை அரசாங்கங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது எனக் குறிப்பிட்ட அவர், சட்டமன்றங்களில் தேசியப் பிரச்சினைகள் குறித்து விவாதிக்கும்போது அரசியல் கட்சிகள் ஒன்றையொன்று மதித்து நடந்து நேயத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

**முத்துமாரி**

மடம், ஆலயத்தின் கூரைகள், வசந்த மண்டபம், சண்டேசுரர் ஆலயம், எழுந்தருளி வாகனங்கள். மோரி மடம், மின்சார இயந்திரம், மின் இணைப்புகள் யாவும் முற்றாக சேதம் அடைந்தன.

நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமிக்க [illegible] ஆலயம் [illegible] மாகவும், காக்கும் தெய்வமாகவும் இருந்துவந்தது குறிப்பிடத்தக்கது. இந்த ஆலயத்தை மீண்டும் வாலஸ்தாபனம் செய்து கும்பாபிஷேகம் செய்வதற்கு 800 இலட்சம் ரூபா (8 கோடி) வரை செலவாகும் என [illegible] ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் திரு. வ. இ. நடராஜா தெரிவித்துள்ளார்.

ஆலயம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து தினமும் பார்வையிட வரும் பக்தர்கள் கண்ணீர் விட்டு அழுதுவிட்டுச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

**வவுனியாவில்**

இதேசமயம் வவுனியா மன்னார் வீதியில் உள்ள நீ. அரிசி ஆலையும் குண்டு வீச்சால் சேதமாக்கப்பட்டது.

காலை 9.30 மணியளவில் சாஸ்திரி கூளாங்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் ஆறு வீடுகளும், அரிசி ஆலையும் உழவு இயந்திரம் ஒன்றும் சேதமாக்கப்பட்டன. அத்துடன் 5 பேரல் மண்ணெண்ணெய் நிலத்தில் சிந்தி வீணாகியுள்ளது.

தொடர்ந்து காலை பத்து மணிக்கு பெரியகட்டு என்னுமிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் ஒரு வீடு சேதமாக்கப்பட்டதுடன், அருகில் இருந்த பட்டியில் நின்ற முப்பது ஆடுகள் இறந்தும், காயப்பட்டும் உள்ளன. (தி) (மு)

**இடிந்த கட்டடங்களின்**

[illegible] கருவால் மூடப்பட்ட பதுங்கு குழி ஒன்றிலிருந்தோர் பல மணி நேர சிரமத்தின் பின் மீட்கப்பட்டனர். இங்கிருந்து வெளியேறியோர் பொல்கனை முதல மருதங்கேணி வரையிலான பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். வீடுகள் அனைத்தும் தரைமட்டமானதால் வீடுகளை இனம் காணுவதோ, எல்லைகளைக் கண்டறிவதோ முடியாமலிருக்கிறது.

வளவைமக்கள் பரவலாக இடம்பெயர்ந்துள்ளதால் இறந்தோரின் தொகை இன்னும் முழுமையாகப் பெறமுடியவில்லை. எனினும் சுமார் பத்துப்பேரளவில் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது. வலைகள், தோணிகள் பாரியளவில் சேதமடைந்துள்ளன. குண்டுவீச்சு தாக்கத்தினால் பறந்த வலைகள் மின்சாரக் கம்பிகளில் தொங்குவதையும் காணக்கூடியதாகவுள்ளது. குண்டுவீச்சினால் ஏற்பட்ட பாரிய குழிகளையும், நேபாம் குண்டின் எரிந்த தடங்களையும் எங்கும் காணக்கூடியதாகவுள்ளது.

சிவகுரு வித்தியாலயத்தினுள் ஏற்பட்டிருக்கும் குழி சுமார் 7 அடி ஆழமானதாகும்

கூறியதாக ஈரானிய செய்தி ஸ்தாபனம் 'இர்னா' அறிவித்துள்ளது.

[illegible]களையே எரித்துச் சேதமாக்கியுள்ளனர். (மு)

# திருமலையில் கைதான சிலர் பூஸா தடுப்பு முகாமுக்கு

திருகோணமலையில் கடந்த சில மாதங்களாக இடம்பெற்றுவரும் சிங்கள இராணுவத்தின் இனவெறியாட்டத்தின்போது கைது செய்யப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்களில் ஒரு சிலர் அண்மையில் பூஸா தடுப்பு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் கொண்டு செல்லப்பட்டவர்கள் விபரம் தெரிவிக்கப்படவில்லை. அதேவேளை கைது செய்யப்பட்டவர்களில் மீதியானோர் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை என்றும் அங்கிருந்து கிடைக்கப்பெற்ற தகவல் மூலம் அறிய வந்துள்ளது.

# இளைஞர் சித்திரவதை; பணம் பறிமுதல்

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தினர் வவுனியா நகரில் வைத்து இளைஞரொருவரைக் கைதுசெய்து கடும் சித்திரவதையின் பின் அவரிடமிருந்த பணத்தையும், நகைகளையும் பறித்தெடுத்தனர்.

கடந்த வியாழக்கிழமை சிறிலங்கா இராணுவத்தினர் வவுனியா நகரில் வைத்து இ[illegible]யைச் சேர்ந்த ந. சந்திரகுமார் (வயது 23) என்பவரைக் கைதுசெய்து சித்திரவதைகளுக்குள்ளாக்கியுள்ளனர். சித்திரவதையின் பின் அவ்விளைஞரிடமிருந்த மூவாயிரம் ரூபா பணமும், ஒன்றரைப் பவுண் நகையும் இராணுவத்தினரால் பறித்தெடுக்கப்பட்டதன் பின் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இத்தினத்தில் ஊரிக்காட்டைச் சேர்ந்த யோகநாதன் என்பவரும் வவுனியா நகரில் வைத்து இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டு விடுதலையாகியுள்ளார்.

# மாணவர்கள் உணவுபெற வவுனியா நகர் வரவும்

(வவுனியா)

வவுனியா கிராமப்புறங்களில் வாழும் பாடசாலை மாணவர்கள் தமது மதிய உணவு முத்திரைகளைக் கொண்டுவந்து நகரப்பகுதிக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலுள்ள கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கு மேற்படி முத்திரைக்குரிய பொருள்கள் அனுப்பி வைப்பதற்கு இராணுவம் தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும், குறிப்பிட்ட கிளைகளுக்கு பொருள்கள் அனுப்பி வைப்பது தமது சக்திக்கு அப்பாற்பட்ட விஷயம் என்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் தெரிவிக்கப்படுவதை அடுத்து கிராமப்புறங்களில் வாழும் மாணவர்கள் நகரப்பகுதிக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# சாலை மறியல் போராட்டம்; 17,000 பேர் இதுவரை கைது

கருணாநிதி அரசாங்கத்தைக் கலைக்கக்கோரி இந்திரா காங்கிரஸும், அ. இ. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் நடத்திவரும் சாலைமறியல் போராட்டத்தில் இதுவரை 17,000 பேரைக் கைதுசெய்துள்ளதாகத் தமிழ்நாடு காவல் துறைத் தலைவர் துரை நேற்று தெரிவித்துள்ளார்.

ஆனால் இரு கட்சிகளையும் சேர்ந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமான தொண்டர்களுடன் ஒரு சில தலைவர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்களுக்கு தமிழக அரசு காங்கிரஸையும், அ. இ. அ. திராவிட முன்னேற்றக் கழகத்தையும் குற்றம் சாட்டியுள்ளது. இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களில் சிலரின்மேல் கொலைக்குற்றமும், அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு சதி முயற்சி செய்ததாகவும் குற்றப்பத்திரிகை தாக்கல்செய்யப்பட்டுள்ளதாம்

## மரண அறிவித்தல்

### செல்வன் கு. சுதர்சன்

காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த சுதர்சன் (26-01-91) நேற்று காலமாகிவிட்டார். இவர் முன்னாள் கடற்றொழில் நிறைவேற்று முகாமையாளர் (பேசாலை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, சுப்பிட்டி) குரேஸ் (குருகேசு), யோகேஸ்வரி ஆகியோரின் மகனும் சுதர்மினி (லண்டன்), சுதாகரன் (லண்டன்), சுதாமன் ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை சுந்தரம்மா தம்பதிகளினதும், நமசிவாயம் பரமேஸ்வரி தம்பதிகளினதும் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் 27-01-91 இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் காரைநகர் சாம்பலோடை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தாயார் யோகேஸ்வரி

(R/1056)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது